1994 ஏப்ரல் 4]

திருமதி ரா. சக்குபாய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காகப் பாலம் கட்ட ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கியும், கோயில் திருப்பணிக்கு மேலும் 71 இலட்சம் ரூபாய் வழங்கியும் உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மேலும் இப்பணிகள் எப்பொழுது முடிவடையும் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-15*

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக, உங்கள் மூலமாக, ஆறு மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதையே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

169–

வரகூர் தொகுதியில் திருமாந்துறைக்கும் கீரனூருக்கும் இடையே பாலம் கட்டுதல்

**19992*--திரு ஏ.தா. பொன்னுவேலு:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம் சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் திருமாந்துறைக்கும்- கீரனூருக்கும் இடையே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பாலம் கட்டும் பணியை மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது. என்பதைக் குறிக்கும்.]